[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1997 மார்ச் 18

தந்திருக்கிற அந்தத் தீர்ப்பை மறுபரிசீலனை செய்து, இனிமேல் இதுமாதிரி ஆதாரம் இல்லாமல் தகவல்களைத் தர வேண்டாம் என்ற அடிப்படையிலே, ஒரு 'வார்னிங்' என்கிற அடிப்படையிலே, ஒரு எச்சரிக்கை தந்து, அதை அவர் பின்பற்றுவதற்குரிய ஒரு வாய்ப்பும் தந்து, அவரை, இந்தக் கூட்டத்தொடரிலே பணியாற்ற நீங்கள் அனுமதிக்க வேண்டும், உங்களுடைய தீர்ப்பை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் மெத்த பணிவன்போடு உங்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை குறித்து, தாங்கள் இன்று இந்த அவையிலே ஆற்றியுள்ள உரை, கருத்துரை, ஏனென்றால் வேறு எந்தப் பொருள் குறித்தும் ஆற்றிய உரையல்ல இது. ஒரு முக்கியமான பொருள் குறித்து ஆற்றிய கருத்துரை, இந்தப் பேரவையினுடைய வரலாற்றில் இடம் பெறக்கூடிய மிக முக்கியமான உரையாகும். தங்களைப் பேரவையினுடைய தலைவராக இருக்க வேண்டும் என்று கேட்டு, தாங்களும் ஒப்புதல் அளித்தபோது, நான் உள்ளபடியே எந்த உணர்வோடு தாங்கள் இந்த அவைத் தலைவர் பொறுப்பை ஏற்க வேண்டும் என்று விரும்பினேனோ, அந்த விருப்பம் இன்றைக்கு நூற்றுக்கு நூறு பங்கு நிறைவேறி இருக்கிறது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) பெரு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தாங்கள் அமர்ந்திருக்கின்ற இந்த இடத்தில், எனக்கு முதலமைச்சர் பதவி வேண்டாம், அந்தப் பதவிதான் வேண்டும் என்று கேட்டு நான் அமர்ந்திருந்தாலும்கூட, இப்படிப்பட்ட ஒரு கண்ணியமான, கருத்தோட்டம் மிக்க ஆதாரப்பூர்வமான, நெஞ்சு நெகிழத்தக்க ஒரு கருத்தை இந்த அவைக்குத் தந்திருக்க முடியுமா என்றே சந்தேகப்படுகிறேன். வேறு யாரையும் ஒப்பிட்டுக் காட்டுவது சரியல்ல என்பதால், என்னையே ஒப்பிட்டுக்காட்டிச் சொல்கின்றேன். அந்த அளவு இன்று அருமையான வாதங்களை எடுத்து வைத்து, நல்லதொரு உரையை நாடும், நாட்டுக்குத் தேவையான ஜனநாயகமும் காப்பாற்றப்படுவதற்கு நீங்கள் இங்கே வழங்கியிருக்கின்றீர்கள். அ.தி.மு.க. சட்டமன்றக் கட்சியினுடைய தலைவர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள், ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டும் என்ற கருத்தைச் சொன்னார்கள். அவர்கள் உரையில், திரு. இரா. தாமரைக்கனி ஏதோ ஆதாரத்தைக் கொடுத்ததாக, சரியாகவோ, தவறாகவோ, வாக்கியத் தவறாகவோ குறிப்பிட்டார்கள். ஆதாரம் தரப்படவில்லை. அதைத்தான் தாங்கள் ஏறத்தாழ ஒரு மணி நேரத்திற்கு மேலாக

உரையாற்றிக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். இங்கு மாத்திரமல்ல. எங்களையெல்லாம் அழைத்து, எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்து, எதிர்க் கட்சித் தலைவரையும் அழைத்துக் கொண்டு, பக்கம் பக்கமாக அந்தத் தாள்களையெல்லாம் காட்டி, இவைகள் எல்லாம் வெறும் அவதூறுகள். இன்னும் சொல்லப்போனால் ஃபோர்ஜரி செய்யப்பட்ட கடிதங்கள் என்பதையெல்லாம் விளக்கியிருக்கின்றார்கள். இதற்குப் பிறகு அளிக்கப்பட்ட ஒரு தீர்ப்பு சாதாரணமான தீர்ப்புதான் என்றாலும்கூட திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் இங்கே கேட்டுக்கொண்டதைப்போல, சுட்டிக்காட்டியதைப்போல இந்தத் தீர்ப்பு அளிக்கக்கூடிய அவசியம்கூட இந்த அவைக்கு, தங்களுக்கு, பேரவை முன்னவருக்கு வந்திருக்க வேண்டுமா என்ற வினா எழாமல் இல்லை.

முற்பகல் 11-05

ஆனால் ஒன்றை நினைவுபடுத்துகிறேன். இந்த அவையில் பேரவைத் தலைவராக வீற்றிருந்தவர்கள் எத்தகைய தீர்ப்புகளை எல்லாம் அளித்திருக்கிறார்கள் என்பதை நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். பட்ஜெட் கூட்டத் தொடர் முடியும் வரையில் அவைக்குள்ளே நுழையக்கூடாது என்று திரு. துரைமுருகன், திரு. அ. இரகுமான்கான், திரு. க. சுப்பு இந்த 3 உறுப்பினர்களும் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் ஆளும் கட்சியிலே அமர்ந்திருந்தபோதுதான் வெளியேற்றப்பட்டார்கள். பட்ஜெட் கூட்டத்தொடர் முடிகிற வரையிலே அவர்கள் உள்ளே நுழையக் கூடாது என்று. அதற்காக அன்றைக்கிருந்த நாங்கள் அனைவருமே வெளியேறி அந்த பட்ஜெட் கூட்டத்தொடர் முடியும் வரையிலே அந்த 3 பேருக்காக நாங்களும் அவைக்கு வராமலே இருந்து ஒவ்வொரு நாள் மானியத்தையும் நாங்கள் சென்னையிலே கூட்டம் போட்டு ஒவ்வொரு நாள் பொதுக் கூட்டத்திலே பேசிக்கொண்டிருந்தோம். அது வரலாறு.

இந்தி ஆதிக்கத்தை எதிர்ப்பதற்காக-இந்தியை எதிர்ப்பதற்காக அல்ல - இந்தி ஆதிக்கத்தை எதிர்ப்பதற்காக, தி.மு.க., அ.தி.மு.க., இரண்டு கட்சிகளும் ஏற்றுக்கொண்ட கொள்கை; அண்ணா வழியிலே வந்தவர்கள் என்று சொல்லிக்கொள்கிற நாம் ஏற்றுக்கொண்ட கொள்கை இந்தி ஆதிக்க எதிர்ப்பு; அதை எதிர்ப்பதற்காக நம்முடைய பேராசிரியர் அவர்களும், அவரையும் சேர்த்து 10 சட்டமன்ற உறுப்பினர்களும் அரசியல் சட்டத்தினுடைய நகலை எரித்தார்கள் என்பதற்காகக் கைது செய்யப்பட்டார்கள்.

யார் சட்டத்தை மீறினாலும் கைது செய்யப்படுவது இயற்கை எந்த ஆட்சியிலும். அதை நான் குறை சொல்ல மாட்டேன். ஒரு போராட்டம் என்று வந்துவிட்டால் கைது செய்யப்படுவதற்காகத்தான் போராடுவது. கைது செய்யப்பட்டு தண்டிக்கவும் பட்டார்கள்.

அதற்குப் பிறகு அன்றைக்கிருந்த பேரவைத் தலைவர் அதற்குத் தந்த தண்டனை என்ன தெரியுமா? பேராசிரியர் உள்ளிட்ட 10 எம்:எல்.ஏக்களும், எம்.எல்.ஏ. பதவியை இழக்க வேண்டும் என்று சொல்லி, இந்தி ஆதிக்கத்திற்காகவே அண்ணா தலைமையிலே நாங்கள் எல்லாம் இருக்கிறோம் என்று மார்தட்டிக் கொண்டிருந்த நாவலர் நெடுஞ்செழியன், நிதியமைச்சர், அவை முன்னவர் அவர் எழுந்து தீர்மானம் கொண்டு வந்து பேராசிரியரையும் மற்றும் 9 பேரையும் நீங்கள் எம்.எல்.ஏக்களே இல்லை என்று வெளியே அனுப்பிவிட்டார்கள். அவர்கள் பிறகு அந்தப் பதவியிலே இல்லை. அந்த பீரியட் முடிகிற வரையிலே, அந்தக் காலக்கட்டம் முடிகிற வரையில் அவர்கள் எம்.எல்.ஏக்களாக இல்லை. மொழிக்காக அவர்கள் செய்த தியாகம் என்று அதை நாங்கள் எடுத்துக் கொண்டோம்.

பரிதி இளம்வழுதி இந்த அவையிலே எத்தனை முறை வெளியேற்றப்பட்டார் சிறந்த ஸ்பீக்கர் இருந்தபோது (சிரிப்பு) என்பதைத் திரு. திருநாவுக்கரசு அவர்கள் அறிவார்கள். அவர்களுடைய அனுபவமும் அவருக்குத் தெரியும்.

முரசொலி ஆசிரியர் இந்த அவையிலேதான், கூண்டு கட்டப்பட்டு கூண்டில் நிறுத்தப்பட்டார். நிறுத்தப்பட்டவர் என்னுடைய மருமகன் என்பதற்காக நான் வருத்தப்படவில்லை. ஒரு பத்திரிகையினுடைய ஆசிரியர் இந்த மாமன்றத்தினுடைய வரலாற்றில் கூண்டு கட்டப்பட்டு கூண்டிலே நிறுத்தப்பட்டார்.

விகடன் ஆசிரியர் இந்தப் பேரவைத் தலைவர் ஒருவரைப் பற்றியோ அல்லது அவையைப் பற்றியோ ஒரு கேலிச் சித்திரம் வெளியிட்டதற்காகக் கைது செய்யப்பட்டார்.

இவைகள் எல்லாம் இந்தப் பேரவையினுடைய கடந்த கால வரலாறு. ஆனால் இன்றைக்கு தாங்கள் தந்திருக்கின்ற தீர்ப்பும் அவை முன்னவர் அவர்கள் இங்கே படித்து அனைவரும் ஒப்புக்கொண்டு இருக்கின்ற தீர்ப்பும் உள்ளபடியே கூட்டத்தொடர் வரையிலே--சுமார் 40 நாள் என்று கருதுகிறேன். இன்று முதல் 40 நாள் இருக்கலாம். ஏனென்றால் ஏப்ரல் கடைசி வரையிலே அவை

நடக்கக்கூடும். அது அலுவல் ஆய்வுக்குழுவிலே எடுக்க வேண்டிய தீர்மானம்--சுமார் *40* நாள் இன்று முதல். அதுவரையிலே அவர் கலந்துகொள்ளக்கூடாது என்ற தீர்ப்பை இந்த அவை தீர்மானமாக வடித்து எடுத்து இருக்கிறது.

நான் ஒன்றை நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அஸாம் மாநிலத்தில் இதுபோன்ற ஒரு அவதூறை பேரவையிலே கூறிய ஒரு உறுப்பினர் அவையிலே மன்னிப்பு கேட்டுக்கொண்ட பிறகும்கூட அவரை அந்தக் கூட்டத்தொடர் வரையிலே விலக்கி வைத்த செய்தி உண்டு. அதையெல்லாம் நாம் எண்ணிப் பார்க்கிற அதே நேரத்தில் இனி இப்படிச் செய்ய மாட்டார் என்று திருநாவுக்கரசு அவர்கள் சொல்லியிருக்கின்ற அந்தக் காரணத்தையும் மனதில் கொண்டு இந்த *40* நாள் என்பதை *20* நாளாகக் குறைத்து *20* நாள் கூட்டத் தொடரில் கலந்து கொள்ளக் கூடாது என்ற அளவிலே குறைக்கலாம்-- அதற்குக்கூட அவர் தன்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்ள வேண்டும்; இனி இப்படி நடக்காது என்பதற்கேற்ப திருநாவுக்கரசு அவர்கள் சொல்லிய அந்த உறுதிமொழியை நான் நம்பினாலும்கூட அவர் யாரைச் சொல்லி, யாரை நம்பி இந்த உறுதிமொழியைச் சொல்கிறார் என்பதை அவருடைய மனசாட்சிதான் அவருக்குச் சொல்ல வேண்டும். இருந்தாலும் அவரால் குறிப்பிடப்பட்ட அந்த உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் ஆதாரம் அற்ற ஒரு செய்தியை அவதூறாகத் தங்களிடத்திலே கொடுத்தமைக்காக வருத்தம் தெரிவித்துக்கொண்டு இந்த அவையிலே சொன்னார்களானால் இந்த *40* நாட்களை *20* நாட்களாகக் குறைக்கலாம்--என்ற என்னுடைய கருத்தைத் தாங்களும், இந்த அவையும் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்ற நிலையிலே எடுத்து முன்வைத்து அமைகிறேன். வணக்கம்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். திருநாவுக்கரசு.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் ஏறக்குறைய *1* மணி, *1½* மணி நேரம் இங்கே சொன்ன கருத்துக்கள், அதைத் தொடர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன கருத்துக்கள், இவை எல்லாமே மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனிக்கு மட்டும் அல்ல, எதிர்க்கட்சி வரிசையில் இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மட்டும் அல்ல, ஆளுங்கட்சி வரிசையில் இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள்